**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை</u>**

**அரசாணை (4D) எண். 1** **நாள். 28.2.2009.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 84, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள். 8.10.1997.
2. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.பி4/7188/2008, நாள். 28.1.2009.

* * * * *

**<u>ஆணை</u>:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு 1997–ஆம் ஆண்டு முதல் ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. இவ்வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியாலும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ/மாணவியர் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தப்பட்டதன் அடிப்படையிலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி ஆணை வழங்கிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா. எண்.483/FS/P/2009, நாள். 19.2.2009–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ந. வாசுதேவன்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை – 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நலத்துறை, சென்னை –5.
மாநிலக் கணக்காயர், சென்னை –18/ (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–1), சென்னை –18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை2), சென்னை –18/(பெயரில்).
<u>நகல்:</u>
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை –9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாவட்ட வருவாய் அலுவலர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
நிதி (BC, MBC/BG -1) துறை, சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் (சி.ந.ஆ.பி.) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**